# மெட்ரோ ரயில் இணைப்புச் சேவை: ஜனவரியில் 87,701 பேர் பயன்படுத்தினர்

சென்னை, பிப். 11: சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ, கார், சிருந்து (கேப்ஸ்), டெம்போ டிராவல் இணைப்பு சேவையை நிகழாண்டில் ஜனவரி மாதத்தில் மட்டும் 87, 701 பயணிகள் பயன்படுத்தியுள்ளனர். 2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11-ஆம் தேதி முதல் 2020-ஆம் ஆண்டு ஜனவரி வரை 9.58 லட்சம் பயணிகள் இந்த இணைப்பு சேவைகளை பயன்படுத்தியுள்ளனர்.

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் முடிந்து, விமான நிலையம் -வண்ணாரப்பேட்டை வரையும், சென்ட்ரல்-பரங்கிமலை வரையும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தும் பயணிகளுக்கான போக்குவரத்து இணைப்பை மேலும் எளிமையாக்கும் வகையில், ஷேர் ஆட்டோ, கார்களை பயன்படுத்த ஷேர் டிரிப் முறை 2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11-ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது. கிண்டி, திருமங்கலம், ஆலந்தூர், சின்னமலை, ஈக்காட்டுதாங்கல், கோயம்பேடு, பரங்கிமலை ஆகிய 7 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து ஷேர் ஆட்டோ சேவையும், அண்ணாநகர் கிழக்கு, கோயம்பேடு, ஆலந்தூர், வடபழனி, திருமங்கலம் ஆகிய 5 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து கார் சேவையும் வழங்கப்படுகிறது.

மெட்ரோரயில்நிலையங்களில் இருந்து 3 கி.மீ. சுற்றளவில் உள்ள இடங்களுக்கு ஷேர் ஆட்டோக்கள், கார்கள் இயக்கப்படுகின்றன. இதுதவிர, போர்ட் மொபிலிட்டி தயாரித்த செயலி வழியாக சிருந்து இணைப்பு சேவை 14 மெட்ரோ ரயில் நிலையங்களில் செயல்படுத்தப்படுகின்றன. இந்த இணைப்பு சேவை ஒவ்வொரு ரயில் நிலையங்களில் இருந்து 6 கி.மீ. முதல் 8 கி.மீ. வரை செயல்படுத்தப்படுகிறது. இந்த வசதியை பயன்படுத்துவதற்கான ஒரே கட்டணம் ரூ.10. இதுதவிர, டெம்போ டிராவல் இணைப்பு சேவை சின்னமலை, விமானநிலையம், ஆலந்தூர் ஆகிய ரயில் நிலையங்களில் பயன்பாட்டில் உள்ளது.

இந்நிலையில், மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து ஷேர் ஆட்டோ, கார், சிருந்து, டெம்போ டிராவல் இணைப்பு சேவையை நிகழாண்டில் ஜனவரி மாதத்தில் 87, 701 பயணிகள் பயன்படுத்தியுள்ளனர். ஜனவரி மாதத்தில் கார் சேவையை 5,134 பேரும், ஷேர் ஆட்டோ சேவையை 38, 611 பேரும், சிருந்து இணைப்பு சேவையை 29, 425 பேரும், டெம்போ டிராவல் இணைப்பு சேவையை 14, 531 பேரும் பயன்படுத்தியுள்ளனர்.

கார், ஷேர் ஆட்டோ, மெட்ரோ சிருந்து, டெம்போ டிராவல் இணைப்பு சேவையை 2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11-ஆம் தேதி முதல் நிகழாண்டில் ஜனவரி 31-ஆம் தேதி வரை 9 லட்சத்து 58 ஆயிரத்து 352 பேர் பயன்படுத்தியுள்ளனர்.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது:

ஷேர் ஆட்டோ, கார், சிருந்து, டெம்போ சேவையை பயன்படுத்துவோர் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது. இந்தச் சேவையை ஊக்கப்படுத்தும் விதமாக பல்வேறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும், சிருந்து இணைப்பு சேவையை 32 மெட்ரோ ரயில் நிலையங்களிலும் விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. டெம்போ டிராவல் இணைப்பு சேவை 3 ரயில் நிலையங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.இதை பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்றார் அவர்.